# நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 75/2018

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 8 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr மோனிகா | வயது | 30 |
| த.பெ.(அ)க.பெ. | அஷ்வின் | தொழில் | அரசு உதவி மருத்துவர் |
| ஊர் | திருப்பத்தூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

(1) நான் தற்போது ஒசுாில் உள்ள E.S.I மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். நான் கடந்த 30.01.2018 அன்று பகல் 12.00 மணிக்கு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது பங்கூர் கிராமத்தை சார்ந்த பாண்டுரங்கன் த.பெ. ராஜ்போயன், மற்றும் மேற்படி பாண்டுரங்கனின் மனைவி கங்கா, என்பவர்கள் அடிதடி வழக்கில் காயம்பட்டதாக கூறி என்னிடத்தில் வந்தார்கள். மேற்படி நபர்களை அடையாளம் தெரிந்த 4 ஆண்கள் 1 பெண் நபர் கடந்த 29.01.2018 இரவு 11.00 மணிக்கு தங்களை கத்தி மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார்கள்.

(2) மேற்படி நோயாளி பாண்டுரங்கனை பரிசோதனை செய்ததில் அவருக்கு பாண்டுரங்கன் என்பவருக்கு வலது காலில் முட்டிக்கு கீழே வீக்கம் இருந்தது, நெற்றியில் ஒருவெட்டுக்காயம் இருந்தது. மேற்படி காலில் ஏற்பட்டிருந்த வீக்கம் எலும்பு முறிவாக இருக்கலாம் என அவருக்கு மேல்சிகிச்சை வழங்க பரிந்துரை செய்யப்பட்டது.

(3) மேற்படி கால் முட்டியில் ஏற்பட்ட காயம் எலும்பு முறிவாக இருக்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டதில், அவர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு அவர் மேல்சிகிச்சை பெற்று அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே மற்றும் மருத்துவ ஆய்வின்படி அவருக்கு வலது காலில் முட்டிக்கு கீழ்புறம் எலும்பு முறிவு இருந்தது கண்டறியப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் நோயாளி பாண்டுரங்கன் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு

30.01.2018 முதல் 05.03.2018 வரை உள்நோயாளியாக இருந்து மருத்துவசிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி பாண்டுரங்கனுக்கு வழங்கப்பட்ட மருத்துவசிகிச்சை மற்றும் டிஸ்ஜார்ஜ் சம்மரியின் அடிப்படையில் வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு கொடுங்காயம் என கருத்துரை வழங்கியுள்ளேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 4 என குறியீடு செய்யப்படுகிறது.)**

**(4)** மேற்படி நோயாளி கங்காவை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது புற தலையில் வெட்டுக்காயம் இருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்தோம். அதன்அடிப்படையில் மேற்படி நோயாளி அரசு மருததுவமனை அடுக்கம்பாறையில் உள்நோயாளியாக 30.01.2018 லிருந்து 02.02.2018 வரை அனுமதிக்கப்பட்டு சிசிக்சை பெற்றுள்ளார். மேற்படி கங்காவுக்கு வழங்கப்பட்ட மருத்துவசிகிச்சை மற்றும் டிஸ்ஜார்ஜ் சம்மரியின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என கருத்துரை வழங்கியுள்ளேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 5 என குறியீடு செய்யப்படுகிறது.)** போலீஸார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து வாக்குமுலம் பெற்றார்கள்.

<u>எ.த.கு.வி.</u>

கரடுமுரடான பாதைகளில் தலைகுப்புற விழுந்தால் பாண்டுரங்கன் மற்றும் கங்காவிற்கு தலையில் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் நோயாளிக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரேவை பார்க்கவில்லை என்றால் சரிதான், டிஸ்ஜார்ஜ் சம்மரியில் இருந்ததால் அதை வைத்து கருத்துரை வழங்கியிருந்தேன். மேற்படி டிஸ்ஜார்ஜ் சம்மரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாண்டுரங்கன் மேற்படி பள்ளத்தில் விழும்போது அவருக்கு காலில் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

(2) பாண்டுரங்கன் 30.01.2018 லிருந்து 02.03.2018 வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்பட்டதற்கு அவருக்கு எந்த வகையான மருத்துவம் பார்க்கப்பட்டது என்று எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான், டிஸ்சார்ஜ் சம்மரியை வைத்துதான் நான் கருத்துரை வழங்கியுள்ளேன். மேற்படி நோயாளிகளுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நேரடையாக பரிசோதனை

செய்துசிகிச்சை வழங்காததால் அதுகுறிதது சாட்சியம் என்னால் அளிக்க முடியாது என்றாலும் எனவே என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.
ம.வி. இல்லை.